செய்தி வெளியீட்டு எண்: 54 நாள்: 22.02.2021

# கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா 2 ஜிபி இணையதள தரவு அட்டைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கிரண் குராலா, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் கூட்டரங்கில் உயர்கல்வித்துறை சார்பில் கல்லூரி மாணவ, மாணவியருக்கு விலையில்லா 2 ஜிபி இணையதள தரவு அட்டைகளை (Data Card) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கிரண் குராலா, இ.ஆ.ப., அவர்கள் இன்று (22.02.2021) வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:

உலக அளவில் கொரோனாவின் தாக்கத்தால் உயர்க் கல்வி பாதிக்கப்பட்டிருந்த மாணவ, மாணவியர்களின் நலன் கருதி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விலையில்லா 2 ஜிபி இணையதள அட்டைகள் (Data Card) வழங்கும் ஓர் சிறப்பான திட்டத்தினை அறிமுகப்படுத்தினார்.

இத்திட்டத்தின் வாயிலாக கல்வி கற்பதற்கும், தங்களுடைய பாடநூல்களை தரவிறக்கம் செய்து கொள்ளவும், இணையம் வாயிலாக மத்திய மாநில அரசு நடத்தும் போட்டித் தேர்வுகள் மற்றும் பயிற்சி வகுப்புகளில் பங்கேற்க முடியும். இத்திட்டத்தினை முழுமையாக பயன்படுத்தி மாணவ, மாணவியர்கள் தங்களுடைய கல்வித் தரத்தை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக மாணவ, மாணவியர்களின் விருப்பத்தின் அடிப்படையில் பி.எஸ்.என்.எல், ஏர்டெல், ஜியோ, வோடஃபோன் உள்ளிட்ட சேவை நிறுவனங்களின் வாயிலாக 2 ஜிபி இணையதள அட்டைகள் (Data Card) வழங்கப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் பயிலும் 1,591 மாணவ, மாணவியர்களும், சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் பயிலும் 1,175 மாணவ - மாணவியர்களும், அரசு மற்றும் சுய நிதி பாலிடெக்னிக் கல்லூரிகளில் பயிலும் 699 மாணவ, மாணவியர்களுமாக ஆக மொத்தம் 3,465 மாணவ, மாணவியர்கள் பயன்பெறுகின்றனர்.

மேலும், கல்லூரிக் கல்வியுடன் மத்திய அரசின் கீழ் இயங்கும் சுவாயம் தளத்தின் வாயிலாக கூடுதல் பட்டம் மற்றும் சான்றிதழ் சார்ந்த கல்விகள் பயின்று வேலைவாய்ப்புகளை தாங்களே உருவாக்கிக் கொண்டு பயன் பெறலாம். இத்தகைய அரிய வாய்ப்புகளை மாணவ, மாணவியர்கள் பயன்படுத்திக்கொண்டு தங்களுடைய கல்வித்தரத்தினை உயர்த்திக்கொண்டு எதிர்காலத்தில் தங்களுடைய பெற்றோருக்கும் பிறந்த ஊருக்கும் நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

இந்நிகழச்சியில் ரிஷிவந்தியம், கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் திரு.வி.சண்முகம், சங்கராபுரம், தொழிற்பயிற்சி கல்லூரி முதல்வர் திரு.வி.பெருமாள், ஏ.கே.டி. நினைவு தொழிற்பயிற்சி கல்லூரி முதல்வர் திரு.பி.கே.கபிலர், முருகா தொழிறபயிற்சி கல்லூரி முதல்வர் திரு.சி.ஆர்.கண்ணன் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

<u>செய்தி வெளியீடு:</u>

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,

கள்ளக்குறிச்சி மாவட்டம்.